பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆவணி 18 (2—9—68) திங்கள் ★ வெளியூர்: ஆவணி 19 (3—9—68) செவ்வாய் [இதழ்: 67

### ஆசிரியர் தினம்

ஆசிரியர்களின் நலமே நாட்டின் நலம்.

ஆண்டுதோறும் செப்டம்பர் திங்கள் 5-ம் நாளை ஆசிரியர் நாளாகக் கொண்டாடுவது இந்நாட்டு மக்களின் கடமையாகும்.

இந்நன்னாளில் மக்களனைவரும் மனமுவந்து ஆசிரியர் நல நிதிக்குப் பொருளுதவி வழங்குமாறு வேண்டுகிறோம்.

# அறிவுப் பணிக்கு ஆலயப் பணம்

## ஆத்திகத்துக்குப் புறம்பான காரியமன்று!

### திருத்தணி தேவஸ்தானத்துக்கு அறிஞர் அண்ணா வேண்டுகோள்

திருத்தணி செப். 1—

"கடந்த காலத்தில் கோயில்களின் நிதியிலிருந்து பொதுக் காரியங்களுக்குப் பணம் அளிக்கப்பட்டது என்பதற்குச் சான்றுகள் உள்ளன; இடையில் என்ன காரணத்தினாலோ நிறுத்தப்பட்டது.

"பொதுக் காரியங்களுக்குக் கோயில் நிதிகளிலிருந்து உதவலாம். கல்வி நிலையங்கள் ஏற்படுத்துதல்--மருத்துவ விடுதிகள் அமைத்தல் போன்றவற்றிற்குக் கோயில் நிதியிலிருந்து தாராளமாக உதவ வேண்டும்.

"உண்மையை அறிந்துகொண்டு ஆத்திகர்களாக இருப்பவர்கள்தான் உண்மையான ஆத்திகர்கள் ஆவர்!

"ஆலயங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். புறத் தூய்மை, அகத் தூய்மை ஆகியவற்றிற்காகத்தான் கோயில்கள் ஏற்படுத்தப்பட்டன!

"ஆலயத்தின் வருவாயை அறிவாலயம் போன்றவற்றிற்கு அளிப்பது, மதத்திற்குப் புறம்பான காரியம் அல்ல!

"திருத்தணியில், ஒரு கல்லூரி ஏற்பட்டு -- அந்தக் கல்லூரி முருகப் பெருமானின் பெயரையும் கொண்டு செயல்படுமானால், அதைவிட நன்மை பயக்கக்கூடிய காரியம் வேறு இல்லை.

"'திருப்பதிக்குச் செல்லும் வசதி படைத்தவர்கள், இனித் தங்கள் கார்களில் திருத்தணி மலைக்கும் நேராக வரலாம்; இதனால் கோயில் வருமானம் பெருகும்' என எண்ணுவதால், திருத்தணியில் கல்லூரி அமைப்பதற்கு வேண்டிய உதவிகளை தேவஸ்தானத்தார் செய்ய வேண்டும்"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், திருத்தணி மலையில் ரூ. 3 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள மலைப் பாதையைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் கருத்தறிவித்தார்.

இவ்விழாவுக்கு, அறநிலைய அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமைவகித்தார்.

தேவஸ்தான சார்பில் அண்ணா அவர்கட்கும், அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கட்கும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அறநிலைய ஆணையாளர் திரு. இராதாகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார்.

திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. வினயகம் பேசுகையில், திருத்தணியில் கல்லூரி அமைக்கப் பொதுமக்களிடமிருந்து ரூ. 5 இலட்சம் தேவைப்படுவதாகவும், இந்தத் தொகையை தேவஸ்தானமே அளித்துதவ முன்வந்தால் கல்லூரியை அரசிடம் விடாமல் தேவஸ்தானமே நடத்தலாம் என்றும் கூறினர்,

அறங்காவலர் திரு. துரைசாமி நன்றி கூறினர்.

### இரா. நெடுஞ்செழியன்

தலைமைவகித்த அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மக்கள் பணியே மகேசன் பணியாகும். பழனி, திருச்செந்தூர் போன்ற இடங்களில் தேவஸ்தானத்தாரால் நடத்தப்படும் கல்லூரி போன்று இங்கும் அமைக்கப்பட கோயில் நிர்வாகிகளும், பொதுமக்களும் முன்வர வேண்டும்.

"கோயில் வருமானம் மக்களுக்குப் பயன் தரக்கூடியக்கையில் பயன்பட கவண்டும்."

(4-ம் பத்தித் தொடர்ச்சி)

லப்பட்டான்; ஆனல், அரிசனங்கள் தங்களுடைய இறுதி விடுதலைக்காகத் தரப்போகும் விலையுடன் ஒப்பிட்டால், இதில் ஒன்றுமே இல்லை! அரிசனங்கள், தங்கள் உயிரைத் தியாகம் செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும்!

"தாழ்த்தப்பட்ட வாலிபர்கள் தங்களுடைய உரிமையைப் பெறத் தீர்மானித்துவிட்டால் -- இணைந்து செயல்பட்டால் -- உலகத்தில் உள்ள எந்தச் சக்தியும் அவர்களை விழ்த்த முடியாது!

"ஒருநாள், ஆயிரக்கணக்கான அரிசன இளைஞர்கள் எரித்துக் கொல்லப்படுவார்கள்! அந்த நாளை நான் பார்க்க விரும்புகிறேன்! அந்த நாள்தான், நம்முடைய சுதந்தரத்திற்கு வழிவகுக்கும்!"

## அஞ்சல் தலையில் கண்ணகி உருவம்

### மு. தெய்வீகன் முயற்சி

சென்னை, ஆக. 31—

"கண்ணகியின் உருவம் பொறித்த அஞ்சல் தலை வெளியிட வேண்டும்"

என்று நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர், மு. தெய்வீகன் (கள்ளக்குறிச்சி) அவர்கள், மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இக்கடிதம், அஞ்சல் துறை அமைச்சர் இராம் சுபாக் சிங்கிற்கு எழுதப்பட்டது.

"தமிழகத்தின் சிறப்புக்கும் கற்பு நெறிக்கும் பெண்ணின் பெருமைக்கும் எடுத்துக் காட்டாக விளங்கிய கண்ணகியின் உருவம் பொறித்த அஞ்சல் தலை வெளியிட வேண்டும்"

என்று அந்தக் கடிதத்தில் தெய்வீகன் வற்புறுத்தியுள்ளார்.

அக்கடிதத்திற்கு இராம் சுபாக் சிங் பதில் அனுப்பிருயிக்கிறார்:—

"அழியாப் புகழ்பெற்ற கண்ணகியின் அஞ்சல் தலை வெளியிடுவது பற்றி ஆலோசிக்கிறோம்"

என்று அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்திருக்கிறார்.

## 'வேளாண்மை--இயந்திர மயமாக வேண்டும்'

### நாடு வளம்பெற அண்ணா யோசனை

### திருத்தணி ஊராட்சி ஒன்றிய விழாவில் உரை

சென்னை, செப். 2—

"விவசாயத்தில் இயந்திரச் சாதனங்களின் உதவிகொண்டு ஈடுபட வேண்டும்; மேல்நாடுகளைப் போன்று டிராக்டர்களை — சாதனங்களை விவசாயத்தில் பயன்படுத்த வேண்டும்.

'செங்கற்பட்டு மாவட்டத்தில் பல இடங்களில் பாறைகள் நிறைந்த நிலமாக இருப்பதாலும், நீர்ப்பாசனத்துக்குக் கிணறுகளை நம்பியிருப்பதாலும், கிணறுகள் எடுப்பதற்கு இயந்திர — சாதனங்களை மேல்நாடுகளிலிருந்து வரவழைத்துத் தரத் தமிழக அரசு, மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

"பத்தாண்டுகளில் நம் நாட்டில், இயந்திரச் சாதனங்களின் மூலம் விவசாயம் நடைபெறும் என நம்புகிறேன்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தால் வாங்கப்பட்ட டிராக்டரை, ஒன்றியத் தலைவரிடம் ஒப்படைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

அண்ணா அவர்கள், திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தின் புதிய கட்டிடத்தையும் திறந்துவைத்தார்.

ரூ. 67-இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள இக்கட்டிடத் திறப்பு விழா நேற்று மாலை, தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. ஸ்ரீராமுலு வரவேற்புரை நிகழ்த்தினர்.

சட்டமன்றக் காங்கிரசு உறுப்பினர் திரு. கே. வினயகமும் பேசினர்.

அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசுகையில், திருத்தணியில் இவ்வாண்டு ரூ. 6½-இலட்சம் செலவில் ஒரு மருத்துவ விடுதி ஏற்படுத்த அரசு முடிவு செய்திருப்பதாகவும், அதற்கான வேலைகள் அடுத்த திங்களில் தொடங்கிவிடும் என்றும் அறிவித்தார்.

"பொதுக் காரியங்களில் கட்சி வேறுபாடு கருதாது பாடுபட வேண்டும். தமிழ்நாட்டில் எல்லாக் கட்சியினராலும் சனநாயகப் பண்பு காக்கப்படுவது நாமெல்லாம் பெருமைப்படத் தக்கதாகும்" என்றார் அண்ணா.

### இரா. நெடுஞ்செழியன்

அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:—

"கூட்டுறவுத் தொழிற்சாலைகளை இலாபகரமாக நடத்த வேண்டும். திருத்தணி கூட்டுறவுத் தச்சுத் தொழிற்சாலையில் இவ்வாண்டு ரூ. 2,034 இலாபம் கிடைத்திருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

"திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட வேண்டுமானால், ஊராட்சி ஒன்றியத்தின் ஒத்துழைப்பும் தேவை.

"திருத்தணியில் கல்லூரி அமைக்கப் பொதுமக்கள் ரூ. 5 இலட்சம் திரட்டித் தருவார்களானால், அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்."

## சமுதாய உரிமைக்குப் போராடுவீர்!

### தாழ்த்தப்பட்ட மக்களைத் தட்டியெழுப்புகிறார் செகசீவன்ராம்

புதுடில்லி, செ. 2—

"சமுதாயத்தில் நமக்குரிய சரியான இடத்தைத் தரும்படி இதுவரையில் பிச்சை கேட்டுக்கொண்டு இருந்துவிட்டோம்; ஆனல், 'பிச்சை எடுப்பதால் எதுவும் கிடைக்கப்போவது இல்லை' என்பதை உணர வேண்டிய நேரம் இது!

"தாழ்த்தப்பட்டவர்கள் கிளர்ந்தெழவேண்டும். நமது சொந்தப் பலத்தின்மூலம், நமக்கு உரியவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும்.

"ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களை அறைகூவி அழைக்கிறேன் -- போராடுங்கள்! போராடுங்கள்! போராடுங்கள்!' என்று!

"சமுதாயத்தில் மதிப்புள்ள ஓர் இடத்தைப் பிடிப்பதற்காக, நாம் போராடவேண்டும்; இந்தப் போராட்டத்தில், எடுத்த காரியத்தை செய்துமுடிக்க வேண்டும்; அல்லது, இந்தப் போராட்டத்தில் செத்து மடியவேண்டும்—அதுவரை ஓய்வே கூடாது!"

இவ்வாறு மத்திய அரசின் உணவுத் துறை அமைச்சர் செகசீவன் ராம் அவர்கள், அனைத்திந்தியத் தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் உரையாற்றுகையில் அறைகூவினர். அவர் மேலும் கூறியதாவது:—

"கிராமங்களில் மட்டுமே தீண்டாமை இருக்கிறது என்று கூறுகிறார்கள்; அது தவறு; டெல்லியில்கூட தீண்டாமை இருந்துவருகிறது; மத்திய அரசின் தலைமைச் செயலகத்தில்கூட, அரிசனங்களுக்குத் தனி தண்ணீர் வசதி செய்யப்பட்டு இருக்கிறதே! அந்தத் தண்ணீர்த் தொட்டியை உடைத்தெறியுங்கள்!

"கிராமங்களில், 'அரிசனங்கள் தொடக் கூடாது' என்று கிணறுகளில் தடை போட்டிருக்கிறார்களே -- அந்தத் தடையை உடைத்தெறியுங்கள்! அந்தக் கிணறுகளைப் பயன்படுத்துங்கள்!

"யார் உங்களைத் தீண்டத்தகாதவர்களாக நடத்துகிறார்களோ, அவர்களை நீங்கள் தீண்டத்தகாதவர்களாக நடத்துங்கள்!

"அண்மையில் அரிசனச் சிறுவன் ஒருவன் எரித்துக் கொல்

(2-ம் பத்தி பார்க்க)

# ‘அலட்சியப் போக்கைக் கைவிட்டுத் தமிழக அரசின் திட்டங்களுக்கு ஆக்கம் தருக’

## மக்களவையில் தா. கிருட்டிணன் வற்புறுத்தல்

புதுடில்லி, செப். 1—

“தமிழகத்தின் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ரூ. 100 கோடி ஒதுக்கவேண்டும்; ஏற்கனவே தமிழக அரசு தயாரித்து இங்கு அனுப்பியுள்ள திட்டத்தை அங்கீகரித்து, உடனடியாகப் பணம் ஒதுக்க ஏற்பாடு செய்யவேண்டும்; அலட்சியப் போக்கைக் கைவிட்டு, தி. மு. க. அரசின் திட்டங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்”

என்று, மக்களவையில் கழக உறுப்பினர் தா. கிருட்டினன், தனிநபர் தீர்மானம் ஒன்றின்மீது பேசுகையில் வற்புறுத்தினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

“இராமநாதபுரம் மாவட்டம், புயலுடன் கூடிய மழை -- இல்லாவிட்டால் வறட்சி -- என்ற இரண்டிலொன்றைத் தழுவிக் கொண்டு அவதிப்படுகிற மாவட்டம்.

“எங்களது முன்னோர்கள், ஏரிகளையும், குளங்களையும் கட்டி வைத்தார்கள். சோழர் காலத்திலும் அதற்கு முன்னரும் வெட்டப்பட்ட ஏரிகளையும் குளங்களையும், வெள்ளையர் காலத்திலும் கடந்த 20 ஆண்டுகால காங்கிரசு ஆட்சியிலும் பராமரிப்பு எதுவும் செய்யவில்லை. ஏரிகள் அனைத்தும் மண்மேடிட்டுப் போய்விட்டன. வெள்ளம் வந்து சில வாரங்களில் தண்ணீர் எல்லாம் வற்றி வறட்சி ஏற்பட்டு வருகிறது.

“இந்த அவலநிலையைப் போக்குவதற்காகத்தான் தி.மு.க. பதவி ஏற்றதும், ரூ. 100 கோடிக்கான திட்டத்தைத் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பியது; இந்தத் திட்டம் ஏற்கனவே அமுலுக்கு வந்துவிட்டது; ஆனல் துரதிருஷ்டவசமாக, மத்திய அரசு அளித்துள்ள தொகை மிகவும் அற்பமானது.

“மத்திய அரசின் சார்பில் தமிழகம் செல்லும் அதிகாரி சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஆராயும்போது, அக்டோபர் மாத இறுதிக்குள் தனது பணிகளை முடிக்கவேண்டும். குறிப்பாக இராமநாதபுரத்தில், அக்டோபர் மாத இறுதிக்குள் சுற்றுப் பயணம் செய்தால்தான், பிரச்சினைகள் முழுவதையும் புரிந்து கொள்ளமுடியும்.

“கிணறுகள் தோண்டி குடிதண்ணீர் வசதி செய்வதற்காகத் தமிழக அரசு பெரும் முயற்சி செய்துவருகிறது; இதற்கு ஆக்கம் கொடுக்கும் வகையில், அடையாள நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு முன்வர வேண்டும்.”

### பஞ்சம் ஏற்படுமுன்

“அடுத்த 8 அல்லது 10 நாட்களில் மழை பெய்யாவிடில் தமிழகத்தின் சில பகுதிகளில் பஞ்சம் தலைதூக்கும்; உரியகாலத்தில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்”

என்று அனந்தன் நம்பியார் வலது கம்யூ) சுட்டிக்காட்டிக் கேட்டுக் கொண்டார்.

### கட்டுக்கடங்கியுள்ளதாம்-- பீதியுறத் தேவையில்லையாம்

“ஆந்திரம், தமிழகம், மைசூரில் சில பகுதிகளில் வறட்சி நிலையைச் சமாளிக்க உணவு--நிதி-- அந்நியச் செலாவணி ஆகியவை ஒதுக்கப்படுகின்றன; நிலைமை கட்டுக்கடங்கியிருக்கிறது; பீதியடையத் தேவையில்லை; இயன்றவரையில் அதிக நிவாரணம் அளிக்கப்படும்”

என்று அமைச்சர் ஏ. பி. ஷிண்டே, விவாதத்திற்குப் பதிலளிக்கையில் கூறினர்.

# மக்களின் நல்வாழ்வுக்கே பதவி ஏற்றோம்!

## ‘பயனில்லை’ என்ற நிலை ஏற்படுமானல்...!

சென்னை, ஆக. 31--

“அரசன் ஒருவன் தன்பாலுள்ள அமைச்சர்களை நீக்கிவிட்டு, ஊரெல்லாம் தேடி ஓர் உத்தமக் கிழவனை -- ஏழைக் கிழவனை அழைத்து அமைச்சராக்கிக்கொண்டான்; அந்த அமைச்சனும், திறம்பட நாட்டை ஆள உதவிபுரிந்தான்.

“ஆனல், அந்த அரசனல் பதவியிலிருந்து நீக்கப்பட்ட அமைச்சர்கள் -- வாழ்வு இழந்த வயிற்றெரிச்சலில் -- அந்த உத்தம அமைச்சர்மீது பழியைச் சுமத்தினர்கள்; ‘இலஞ்சம் வாங்குகிறர்; மாணிக்கங்களை -- முத்துக் குவியல்களைப் பெறுகிறர்’ என்று மன்னருக்கு எழுதினர்கள்; மன்னரும் அந்தப் பழைய அமைச்சர்களை அழைத்து, ‘என்ன ஆதாரத்தின்மீது இந்தக் குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறீர்கள்?’ என்று கேட்டார்; அதற்கு அந்த அமைச்சர்கள், ‘அந்தக் கிழவன் எப்போதும் ஒரு பெரிய பெட்டியைத் தன் அருகிலேயே வைத்திருக்கிறன்; அந்தப் பெட்டியில், தான் வாங்கும இலஞ்சப் பொருட்களைப் போட்டு வைக்கிறன்’ என்று கூறினர்.

“அவர்களுடைய குற்றச்சாட்டு சரியானதுதான என்பதை அறிய விரும்பிய அரசன் -- அந்த அமைச்சர் வெளியூர் சுற்றுப்பயணம் புறப்பட்டபோது -- மாறுவேடத்தில் உடன் சென்றன்; வெளியூரில் அமைச்சர் தனியாக இருக்கும் போது, மாறுவேடத்தில் இருந்த மன்னன் அவரை அணுகி, ‘இது என்ன பெட்டி?’ என்று கேட்டான்; அமைச்சர் சரியான பதில் சொல்லவில்லை; மன்னனுக்குச் சந்தேகம் பிறந்தது; ‘அந்தப் பெட்டியைத் திறந்து காட்டுங்கள்’ என்று கேட்டான் அரசன்; ‘அதைத் திறந்து காட்ட முடியாது’ என்று அமைச்சர் கூறவே, மன்னனுக்குச் சந்தேகம் வலுத்துவிட்டது; உடனே மன்னன், தனது மாறுவேடத்தைக் கலைத்துவிட்டு, ‘மன்னன்’ என்ற முறையில் ஆணையிட்டான் —‘அந்தப் பெட்டியைத் திற’ என்று!

“பிறகு அமைச்சர், தயங்கிக்கொண்டே அந்தப் பெட்டியைத் திறந்தார்; அதிலே இலஞ்சப் பொருட்கள் இல்லை; மாருக, கந்தல் ஆடை ஒன்றுதான் இருந்தது மன்னன் ஆச்சரியப்பட்டு, ‘இந்தக் கந்தல் ஆடையை இவ்வளவு பத்திரமாக ஏன் வைத்திருக்கிறீர்கள்’ என்று கேட்டான்.

“அதற்கு அமைச்சர், ‘நான் ஏழை; இந்த அமைச்சர் பதவி ஏற்பதற்குமுன் அணிந்த ஆடை இது; இதை என் பக்கத்திலேயே வைத்துக்கொண்டதற்குக் காரணம், அந்தப் பெட்டியைப் பார்க்கும்போதெல்லாம் — அந்தக் கந்தல் ஆடையைப் பார்க்கும்போதெல்லாம், நாம் ஏழை; ஏழைகளின் நன்மைக்காகவே நமது பதவி பயன்பட வேண்டும்’ என்ற உணர்வு எனக்குத் தோன்றும்; நீங்கள் என்னை இந்த அமைச்சர் பதவியைவிட்டுப் போகச் சொன்னல், அமைச்சர் பதவிக்குரிய ஆடையைக் கழற்றித் தந்துவிட்டு, இந்த ஆடையை அணிந்து கொண்டு போவதற்காக எப்போதும் அதை என் பக்கத்தில் வைத்திருக்கிறேன்’ என்றராம்!

“அதுபோல், இன்றையத்தினம் ஏழைக் குடியில் பிறந்த நாங்கள் அமைச்சர பதவி பெற்றிருக்கிறேம்!

“பதவி இழந்தவர்கள் — பவிசு இழந்தவர்கள் — பல்லக்கும் பரிவட்டமும் ஆலவட்டமும் ரதகஜதுரகபதாதிகளும் இழந்தவர்கள், எங்கள்மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிறர்கள்!

“ஆனல் நாங்களோ, எந்நேரமும் ஏழைகளின் நல்வாழ்வுக்காகப் பணியாற்றும் நோக்கத்துடன், ‘ஏழைகளின் நல்லெண்ணம்’ எனும் பெட்டியை அருகில் வைத்துக்கொண்டிருக்கிறேம்! ‘அமைச்சர் பதவி’ எனும் அந்த மடம் போனல், ‘மக்கள் மன்றம்’ எனும் இந்த மடத்துக்கு வர எப்போதும் தயாராக இருப்பவர்கள்!

“தொழிலாளர்களின் துணைவர்களாக — பாட்டாளிகளின் நண்பர்களாக -- குடிசைவாழ்வோரின் சகோதரர்களாக இருக்கப் பழகிவிட்டவர்கள் நாங்கள்! பதவியை ஏற்றதுகூட அவர்களது நல்வாழ்வுக்காகத்தான்!

“எங்களால் தொழிலாளர்களுக்குத் துணைபுரியாத நிலை ஏற்படுமானல் — பாட்டாளிகளுக்கு எங்களால் பயன் இல்லை என்ற நிலை ஏற்படுமானல் -- நீங்கள் சொல்லாமலேயே வெளியேறி விடும் மனப்பக்குவம் படைத்தவர்கள் நாங்கள்!”

**--- அமைச்சர் மு. கருணாநிதி**

(சென்னை 80-வது வட்டக் கூட்டத்தில்)

# காங்கிரசாரின் சதித் திட்டத்தைத்தகர்ப்போம்

## தியாகராயநகர் கூட்டத்தில் ம.பொ.சி. முழக்கம்

சென்னை—தியாகராயநகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில், காங்கிரசுக்காரர்கள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றியும், அதன் உள்நோக்கம் பற்றியும் விளக்கி, கழக ஆட்சியின் கண்ணியத்தையும், மக்களுக்கு மதிப்பளிக்கும் முதலமைச்சர் அண்ணு அவர்களின் சனநாயகப் பண்பையும் பாராட்டினர்; அவரது உரையின் முக்கியப் பகுதிகள் வருமாறு :—

### முதலாளிக்காகவே முதலைக் கண்ணீர்

‘நாட்டில் தொழில் அமைதி இல்லை’ என்று காங்கிரசுக்காரர்கள் குற்றஞ்சாட்டினர்கள். ஆலைகளில் வேலை நிறுத்தம் ஏற்பட்டு அதனல் தொழிலாளர்கள் சஷ்டப்படுகிறர்கள் என்பதற்காகக் காங்கிரசார் வருத்தப்படவில்லை; அதனல் பாதிக்கப்படும் முதலாளிகள்-- நிலப்பிரபுக்கள், அவர்களது ஆட்கள்: அதனல் வருத்தப்படுகிறர்கள்!

இதையெல்லாம் நான் சட்டமன்றத்தில் கூறிய காரணத்தால், எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன் என்னைப் பற்றிக் குற்றஞ்சாட்டினர்; அப்போது தி. மு. கழகத்தினர் ஆர்த்தெழுந்து, ‘கருத்திருமன் வருத்தம் தெரிவிக்க வேண்டும்’ என்று கோரினர்; அதைக் கண்டு நான் மெய்சிலிர்த்துப் போனேன், காலமெல்லாம் யாருக்கு உழைத்தேனே--அந்தக் கட்சிக்காரர்கள், என்மீது பழி சுமத்தினர்! காலமெல்லாம் யாரை எதிர்த்தேனே--அந்தக் கட்சியான தி. மு. கழகத்தினர், எனது தன்மானத்தின் காவலர்களாக நின்றதைக் கண்டு நான் பூரித்துப்போனேன்!

### சிந்திக்கும் சக்தியை இழந்துவிட்டவர்கள்

“சட்டமன்றத்தில் காங்கிரசார் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக அவையே ஆர்த்தெழுந்து-- அவர்களைத் தவிர--தீர்ப்பளித்தது பற்றிச் சிந்திக்க வேண்டாமா?

“அவர்களைத் தவிர வேறு எவரும் அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவில்லையே--ஏன்? சிந்திக்க வேண்டாமா?

“சிந்திக்கும் திறன் அவர்களிடம் சாகாமலிருந்தால், இது பற்றிச் சிந்திக்கத்தான் வேண்டும்; ஆனல், காங்கிரசுக்காரர்கள், சிந்திக்கமாட்டார்கள்! அவர்கள் பெற்ற தோல்வி, அவர்களுக்கு விளங்காது! அவர்களுடைய ஆணவ வரலாறு முடிகின்ற வரையில் அது விளங்காது!”

### மக்கட்கு மதிப்பளித்த ஒரே தலைவர்!

‘நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கப்போகிறது; நமக்குத்தான் பெரும்பான்மை இருக்கிறதே’ என்பதற்காக முதலமைச்சர் அண்ணு அவர்கள், பேசாமல் இருந்து விடவில்லை! காங்கிரசுத் தலைவரைப்போல், ‘திண்டுக்கல் மலையை அசைத்தாலும் அசைக்கலாம்--என்னை அசைக்க முடியாது; திருப்பதி மலையைப் புரட்டினலும் புரட்டலாம்--என்னைப் புரட்ட முடியாது’ என்று பேசவில்லை!

அண்ணு அவர்கள், பெருந்தன்மை மிக்கவர் --- விவேகமுள்ளவர்; எனவே, அதனல் நீண்ட நேரம் விளக்கம் தந்தார்—

“காங்கிரசுக்காரர்கள் எங்கள்மீது நம்பிக்கை இல்லை கூறுவதைப்பற்றிக் கவலை இல்லை; அவர்களுக்கு ஓட்டளித்தவர்கள் மக்கள்; அந்த மக்களுக்கு மதிப்பளித்து, அவர்கள் மனதில் படும்படி எனது விளக்கங் வைக்கிறேன்”

என்ற முறையில் -- உடல்நிலை சரியில்லாத போதும் அவர் விளக்கம் தந்தார்.

இப்படி, மக்களுக்கு மதிப்பளித்த ஒரே தலைவர் --- ஒரே முதலமைச்சர் அண்ணு அவர்களாகத்தான் இருக்க முடியும்!

மக்கள் தீர்ப்பளித்து தி. மு கழகத்தை ஆட்சிப் பீடத்தில் ஏற்றினர்கள். இப்போது அந்தத் தீர்ப்பை அழிக்க, அதற்கு உரிமை இல்லாதவர்கள் முயலுகிறர்கள்!

### குடிசைவாசிகளுக்குக் காங்கிரசார் துரோகம்

காங்கிரசுக்காரர்கள் இப்போது நகரத்தில் தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டவிடாமல் செய்ய முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறர்கள், உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன்; என்னைச் சில குடிசைவாசிகள் அணுகினர்கள்; அவர்கள் எந்தக் கட்சிக்காரர்கள் என்று தெரியாது; ஆனல் அவர்கள், தங்கள் குடிசைகளைப் பிரித்துவிட்டு வேறு புதிய வீடுகள் கட்டித் தர அரசாங்கம் முயல்வதாகவும், இரண்டு நாள் அவகாசம் வேண்டும் என்றும் கேட்டார்கள்; நான் அதிகாரிகளை அணுகி அவகாசம் கேட்டேன்; அவர்களும் தந்தார்கள்; இதற்கிடையில், குடிசைவாசிகள் சார்பில் கோர்ட்டில் மனுக்கொடுத்து, ‘குடிசைகளைப் பிரிக்கக்கூடாது’ என்று தடையுத்தரவை வாங்கிவிட்டார்கள்.

இதனல் என்ன நடக்கும்? ஓலைக் குடிசைகளுக்குப் பதில் தீப்பிடிக்காத குடிசைகள் வராது!

இது, மாநகராட்சித் தேர்தல் வருகிற நேரம்; இந்த நேரத்தில் இப்படித் தீப்பிடிக்காத குடிசைகளைக் கட்டித் தராமல் செய்துவிட்டால், தேர்தலின்போது, ‘ஐயோ, பாருங்கள்’ தீப்பிடிக்காத குடிசைகள் கட்டித் தருகிறேன் என்றர்கள் -- தரவில்லை; எரிந்த குடிசையைப் பாருங்கள்- அந்தக் கொடுமையை நோக்குங்கள்; கொடுமை நீங்கக் காலை மாட்டுக்கு வாக்களியுங்கள்’ என்று பேசிடத்தான் அவர்கள் இப்போது இந்தச் சதித் திட்டத்தில் இறங்கியிருக்கிறர்கள்!

இதற்காக நாம் அயர்ந்துவிட வேண்டியதில்லை! இந்தச் செய்தியை ஒவ்வொரு குடிசைக்கும் கொண்டு செல்வோம்! உண்மையை விளக்குவோம்! குடிசைவாழ்வோரின் நன்மைக்கு எதிராகச் செயல்படுவோரின் திட்டத்தைத் தகர்ப்போம்!”

# யோசனை கூறுகிறது மத்திய அரசு!

புதுடில்லி, ஆக. 31—

அரிசி, கோதுமை போன்ற தானியங்களுக்கான மொத்தப் பங்கீட்டு அளவை, ஒரு வாரத்திற்கு 1.75 கிலோவாக இருப்பதை, 2.5 கிலோவாக உயர்த்தும்படி மாநில அரசுகளுக்கு மத்திய அரசு யோசனை கூறியிருக்கிறதாம்.

“மத்திய அரசின் இந்த யோசனையை அமுல்செய்வது, மாநில அரசுகளின் தானிய இருப்பின் மீதே அமையும்” என்றும் கூறப்பட்டிருக்கிறது.

# வாரத்தில் 5-நாள் அலுவல்

## தலைமைச் செயலகத்தின் திட்டம் பரிசீலனை

சென்னை, ஆக. 31—

"தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் காலை 10-மணி முதல் மாலை 5-மணிவரை பணியாற்றுவதற்குப் பதிலாக காலை 8-30 மணிமுதல் மாலை 6-மணி வரை பணியாற்றும் வகையிலும், வாரத்திற்கு 6-நாட்களுக்குப் பதில் 5-நாள் மட்டுமே அலுவலகம் இயங்குவதற்கான வகையிலும் ஒரு திட்டம் ஆராயப்பட்டுவருகிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தைத் தாங்கள் வரவேற்பதாகவும் ஆனால், காலை 8-30 மணி என்பதற்குப் பதில் 9-மணி என்று வைக்கலாம் எனவும் செயலக ஊழியர் சங்கத்தின் சார்பில் மகஜர்மூலம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அண்ணா மேலும் தெரிவித்தார்.

# 'தமிழ் நாடு' பெயர் மாற்ற மசோதா

## மக்களவையில் கொண்டுவரப்பட்டது

புதுடில்லி, ஆக. 31—

'சென்னை மாநிலம்' என்ற பெயரை, 'தமிழ் நாடு' என மாற்றுவதற்கு வகைசெய்யும் மசோதா (நகல் சட்டம்) நேற்று மக்களவையில் கொண்டுவரப்பட்டது.

"மாநிலத்தின் பெயரை, 'தமிழ்நாடு' என மாற்றவேண்டும்" என்று சிபாரிசு செய்து, தமிழகச் சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தைத் தமிழக அரசு கடந்த ஆண்டு செப்டம்பரில் அனுப்பியதாக, மசோதாவின் நோக்கங்கள் பற்றிய அறிக்கை கூறுகிறது.

பெயர் மாற்றத்துக்கான மசோதா ஒன்றைக் கொண்டுவருமாறு மத்திய அரசை, தமிழக அரசு கேட்டுக்கொண்டது; அதைச் செயல்படுத்துவதற்காக மத்திய அரசு, மசோதா ஒன்றைத் தயாரித்தது; அந்த மசோதாவுக்குத் தமிழக அரசு ஒப்புதல் அளித்தது.

அதைத் தொடர்ந்து இம்மசோதாவை, மக்களவையில் உள்துறை அமைச்சர் சவான், நேற்று தாக்கல் செய்தார்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இந்த மசோதா நிறைவேறி, குடியரசுத் தலைவர் கையெழுத்திட்டதும் அமுலுக்கு வரும்.

# தமிழகத்திற்குத் துப்பறியும் நாய்கள்

## கிழக்கு ஜெர்மனியிலிருந்து தருவிக்கத் திட்டம்

சென்னை, ஆக. 31—

தமிழகக் காவல் துறையில் உள்ள துப்பறியும் நாய்ப் படைக்காகக் கிழக்கு ஜெர்மனியிலிருந்து இரண்டு நாய்களைத் தருவிக்க காவல் துறைத் தலைமை அதிகாரி திட்டமிட்டிருப்பதாகவும், இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களில் இதற்குத் தேவையான நாய்கள் கிடைக்குமா என்று பார்க்கும்படி அவரிடம் கூறப்பட்டிருக்கிறது என்றும், முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றக் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

# மிராசுதார் பாதுகாப்புக்காக போலீசு அனுப்பவில்லை

## சட்டமன்றத்தில் அண்ணா விளக்கம்

சென்னை, ஆக. 31—

"தஞ்சை மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற அறுவடையின்போது எந்த ஒரு நிலக்கிழாருக்கும் போலீசுப் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை; வலிவலம் சுற்றுப்புறங்களில் கிசான் தகராறுகள் இருந்துவருவதால் அங்கு ரிசர்வ் போலீசார் நிறுத்தப்பட்டிருக்கின்றனர்; ஏதேனும் சச்சரவு ஏற்படும்போது, இருசாராருக்குமே பாதுகாப்பு அளிக்கப்படுகிறது; இப்போது தஞ்சை மாவட்டத்தில் மிராசுதாரர்களுக்கும் – விவசாயிகளுக்குமிடையே சமரசம் ஏற்படுத்தப்பட்டு சுமூகமான சூழ்நிலை நிலவி வருகிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்கள்.

"வலிவலத்தில் உள்ள போலீசார், உரிய நேரம் வரும்போது திரும்ப அழைக்கப்படுவர்" என்றும் அண்ணா சொன்னார்.

# நடக்க இருப்பவை

## பொதுக்கூட்டங்கள்

### 3--9--68

**சென்னை 92-வது வட்டம்**

குறள்நெறி மன்றத் துவக்க விழா; மாலை 7 மணிக்கு கங்கையம்மன் கோயில் திடலில்; தலைவர்: பி. வி. தனபால்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., காஞ்சி மணிமொழியார், இரா. சனார்த்தனம், சா. கணேசன் எம்.சி., சோ. கி. மூர்த்தி, செ. கண்ணப்பன், க. துரை, சா. ஆண்டியப்பன், ந. து. தாசன்.

**காஞ்சிபுரம்**

18-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கிருஷ்ணராயர் தெரு ஒதிய அடி மேடையில்; தலைவர்: எஸ். பாண்டுரங்கன்; பேசுவோர்: சி. சிட்டிபாபு எம்.பி., கே. டி. எஸ். மணி எம்.சி., வெ சரசுவதி எம்.சி., எஸ். முருகேசன், த சந்தசாமி எம்.சி.

**நெயவேலி-1 தெற்கு மேலூர்**

தி. மு. க. கிளையின் சார்பில் பாராட்டுக் கூட்டம்; மாலை 6-மணிக்கு திரு. வி. க. திடலில் (நெய்வேலி-2); தலைவர்: செ. பழனிசாமி; பாராட்டுப் பெறுபவர்: அமைச்சர் மா. முத்துசாமி; பாராட்டுவோர்: எஸ். இராகவானந்தம், வெ. கிருட்டினமூர்த்தி எம்.பி., இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., எம். செல்வராசு, எஸ். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., காட்டூர் கோபால், ஏ. எம். இராசா எம்.எல்.ஏ., வெ இராமநாதன் பி.ஏ.பி.எல்.

### 4--9--68

**தத்தநேரி (மதுரை)**

இளைஞர் முன்னேற்ற மன்ற 15-வது ஆண்டுவிழா; அண்ணா திடலில்; தலைவர்: த. கா. செண்பகம்; பேசுவோர்: எஸ். கண்ணன், எஸ். முத்து எம்.எல்.சி., கு. திருப்பதி, பி. எஸ். மணியம் எம்.எல்.ஏ., எஸ். அக்கினிராசு எம்.எல்.ஏ., சொ. காவேரிமணியம், இரா. வீ. இளஞ்சேரன், அ. கு. மதிவாணன், பெ. பெரியசாமி, க. அலாவுதீன், எஸ் ஆர். பெரியசாமி, ச. கருப்பையா, ஆ. அழகர், பொ. சின்னப்பா, மற்றும் பலர்.

ரோஜா பாக்கு & புகையிலை

REGD. NO. 118631 ROJA

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

## தமிழக மின்சார வாரியம்

# ஒப்பந்தப் புள்ளி

**விளக்க விவர எண். 5/'68—'69**

சென்னை—12-ல் உள்ள பேசின் பிரிட்ஜ் பவர் ஸ்டேஷனிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு இடங்களுக்கு மோட்டார் பார வண்டிகள் மூலம் கழிவுச் சாம்பல் (Fly Ash) போக்குவரவு ஏற்றிச்செல்லல் வேலைக்கான முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பங்கள் (Tenders) 16—9—'68 அன்று நடுப்பகல் 12 மணிவரையில் பெற்றுக்கொள்ளப்படும். அதே நாள் அன்று பிற்பகல் 3-30 மணிக்கு வந்திருக்கக்கூடிய டெண்டர்தாரர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளின் முன்னிலையில் அடியில் கையொப்பமிட்டுள்ளவரால் அவருடைய அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகளின் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிக்கும் ரூ. 5.15 (விற்பனை வரி உட்பட) ஆகும்.

மேற்படி ஒப்பந்தப் புள்ளி விளக்க விவரப் பிரதிகள் (Tender Specification Copies) வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ 5·15 விதம், 'துணைத் தலைமைக் கணக்கர், மின் உற்பத்தி நிலையம், பேசின் பிரிட்ஜ் மின் நிலையம், சென்னை-12' (Deputy Chief Accountant Generation, Basin Bridge Power Station, Madras-12) என்ற முகவரிக்கு பண அஞ்சல் (Money Order) மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது. இத்தொகையைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும், தேவையான பிரதிக்குரிய விளக்க விவர எண்ணையும் (Specification No.) தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்க்குச் சேர்க்கப்படாவிட்டால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. உரிய தாள்களில் சேர்ப்பிக்கப்படாத விலை ஒப்பங்களும் குறித்த காலம் தவறி வருபவையும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பங்களையோ, எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விலை ஒப்பதாரர்களுக்கிடையே ஆணையைப் (Order) பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
சென்னை மின் பெருவட்டம்,
மின் உற்பத்தி நிலையம்,
சென்னை-12

# முருகு பாண்டியன் குழுவினர்

## கலை நிகழ்ச்சிகள்

செப். 3: ச. கண்ணனூர் (சமயபுரம்); 4: குணசீலம்; 5: அன்னவாசல் (புதுக்கோட்டை); 6: நல்லூர்; 8: திருச்சி; 11: புதுக்கோட்டை; 12: கோட்டூர் (மன்னை); 13: சுத்துக்கேணி (புதுவை); 14: நேலியனூர்பாளையம் (புதுவை); 15: காஞ்சிபுரம்; 16-முதல் 24-வரை சென்னை; 25: நெட்டப்பாக்கம்; 26: வளவனூர்; 27: எய்யலூர் (சிதம்பரம்); 28: அம்மையப்பன்; 29: புலிவலம் (திருவாரூர்); 30: மேலத்திருப்பாலக்குடி (மன்னை).

## தமிழக மின்சார வாரியம்

# டெண்டர் அறிக்கை

கீழ்க்கண்ட பொருட்களை சப்ளை செய்வதற்கு இதன் அடியில் ஒப்பமிட்டுள்ளவரால், மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் மாலை 3-மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| வரிசை எண் | ஸ்பெசிபிகேஷன் எண் | பொருளின் பெயர் | கடைசி நாள் |
|---|---|---|---|
| 1. | ஓட்டி 19/68-69 | தேக்கு மரப் பலகை 480 மிமீ × 350 மிமீ × 15 மிமீ | 16—9—68 |
| 2. | ஓட்டி 20/68-69 | தேக்கு மரப் பலகை 450 மிமீ × 300 மிமீ × 15 மிமீ | " |
| 3. | ஓட்டி 21/68-69 | தேக்கு மரப் பலகை 250 மிமீ × 100 மிமீ × 15 மிமீ | " |
| 4. | ஓட்டி 22/68-69 | மணிலா கயறு 25மிமீ | " |
| 5. | ஓட்டி 23/68-69 | மணிலா கயறு 20 மிமீ | " |
| 6. | ஓட்டி 24/68-69 | அலுமினிய பெயின்ட் | 18—9—68 |
| 7. | ஓட்டி 25/68-69 | சிகப்பு ஆக்சைட் பெயின்ட் | " |
| 8. | ஓட்டி 26/68-69 | ஆன்டி கரோசிவ் கருப்பு பெயின்ட் | " |
| 9. | ஓட்டி 27/68-69 | தேனிரும்பு மற்றும் துத்தநாகம் பூசப்பட்ட இரும்புக் போஸ்டுகள் | " |
| 10. | ஓட்டி 28/68-69 | தேனிரும்பு போஸ்டு 16 மிமீ | " |
| 11. | ஓட்டி 29/68-69 | துத்தநாகம் பூசப்பட்ட இரும்புச் குழாய்கள் 20 மிமீ | 20—9—68 |
| 12. | ஓட்டி 30/68-69 | துத்தநாகம் பூசப்பட்ட இரும்புக் குழாய்கள் 25 மிமீ | " |
| 13. | ஓட்டி 31/68-69 | துத்தநாகம் பூசப்பட்ட இரும்புக் குழாய்கள் 50 மிமீ | " |

எந்த ஒரு டெண்டரின் ஒவ்வொரு பிரதிக்கும் ஐந்து ரூபாய் பதினைந்து காசுகள் வீதம் ரொக்கமாகவோ, பண அஞ்சல் மூலமாகவோ 'சீப் அக்கவுண்டென்ட், எக்ஸ்பெண்டிசர், திருநெல்வேலி மின் அமைப்பு, திருநெல்வேலி 3, திருநெல்வேலி மாவட்டம்' அவர்களுக்கு அனுப்பியும், ஸ்பெசிபிகேஷன் எண்ணைக் குறிப்பிட்டும் டெண்டர் பாரம் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

பண அஞ்சல்கள் அந்தந்தக் கடைசி நாட்களுக்கு ஐந்து நாட்கள் முன்பு வரைதான் பெற்றுக்கொள்ளப்படும்.

டெண்டர் பாரங்கள் சாதாரண அஞ்சலில்தான் மனுதாரர்களுக்கு அனுப்பப்படும். அஞ்சலில் அவை தவற நேரிட்டால் அதற்கு மின்சார வாரியம் எந்தவிதத்திலும் பொறுப்பாகாது. டெண்டர்கள், விரும்பி வந்திருக்கிற டெண்டர்தாரர்கள் முன்னிலையில் அந்தந்தக் கடைசி நாட்கள் மாலை 4 மணிக்குத் திறக்கப்படும்.

**மேற்பார்வை பொறியாளர்,**
திருநெல்வேலி மின் அமைப்பு, திருநெல்வேலி-3.
திருநெல்வேலி மாவட்டம்

## சென்னையில்

# அண்ணா பிறந்த நாள் விழா

## மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்

"பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவினை சென்னையில் செப்டம்பர் 15 முதல் 22-ஆம் நாள் முடிய கொண்டாடுவதற்குச் சென்னை மாவட்டக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

"15—9—68 அன்று கிளைக் கழக --- துணை மன்றங்களின் நாளாகக் கொண்டாடப்படல் வேண்டும்; அன்று, அலுவலகங்களைப் புதுப்பித்து --- அலங்கரிப்பதுடன், வீதிகளையும் கொடி --- தோரணங்களால் அலங்கரித்துப் புதிய கொடிகள் ஏற்றியும், இனிப்பு, பொங்கல் முதலியவை வழங்கியும், எளியவர்கட்கு உணவு அளித்தும், மாலையில் கலை நிகழ்ச்சிகள் --- பொதுக்கூட்டங்கள் --- பட்டி மன்றங்கள் --- கவியரங்குகள் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தும் சென்னை மாநகரையே விழாக்கோலம் பூணச் செய்யவேண்டும் எனக் கிளைக் கழகங்கள், துணை மன்றங்களின் செயல்வீரர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

"16—9—68 முதல் 22—9—68 வரையிலுள்ள ஏனைய நிகழ்ச்சிகள் --- ஊர்வலம், பொதுக்கூட்டம், விளையாட்டுப் போட்டிகள் பற்றிய செய்திகள் --- அடுத்து அறிவிக்கப்படும்.

"இவ்விழா, சென்னையில் 120 வட்டங்களிலும் நடைபெற வேண்டும்.

"செயலாளர் இல்லாத வட்டங்களில் பகுதிச் செயலாளர்களால் நியமிக்கப்படும் பொறுப்பாளர்கள் இவ்விழாவிற்கான பொறுப்பேற்றுச் செயல்பட வேண்டும்"

என்று, சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன் அறிவிக்கிறார்.

# மணி -- சாமி குழுவினர்

## கலை நிகழ்ச்சிகள்

செப். 3: வாழவல்லான்; 4: செவத்தையாபுரம்; 5: திருவைகுண்டம்; 6: நெல்லை 21-வது வட்டம்; 7: பாளையங்கோட்டை; 8: நெல்லை 18-வது வட்டம்; 9: மேலூர்; 10: சத்திரக்குடி; 11: திருவரங்குன்றம்; 12: மீனாட்சிபுரம் (போடி); 13: ஆடலூர்; 14: தாண்டிக்குடி; 15: பரவை; 16, 17, 18: செம்பனூர்கோவில் வட்டம்; 19: திருச்சி; 20: திருவரங்கம்; 21, 22: கோவை; 23: மாயனூர்; 24: மதுரை; 25: ஆண்டிபட்டி; 26: இராயப்பன்பட்டி; 27: திண்டுக்கல்; 28: திருச்சி வட்டம்; 29: சேலம் கேம்ப்; 30: போத்தனூர்.

# பத்தாயிரம் பேர்களைப் பலிகொண்ட நிலநடுக்கம்

## இரானில் இயற்கையின் கோரத் தாண்டவம்

தெஹ்ரான், செப். 1—

இரானின் வட பகுதி மாநிலத்தில் இரண்டாவது தடவையாகவும் ஏற்பட்ட நில நடுக்கத்தின் காரணமாக ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதனால் குறைந்தது 10,000 பேராவது இறந்துபட்டிருக்க வேண்டுமென்றும், காணமற் போனவர்கள் பல்லாயிரவர் என்றும், சுமார் 3,000 பேர் காயமடைந்திருப்பர் என்றும், இலட்சத்திற்கு மேற்பட்டோர் வீடிழந்திருப்பர் என்றும் நம்பப்படுவதாக அரசு அதிகாரிகள் கூறினர்.

'கனட்' என்று அழைக்கப்படும் நிலத்திற்கடியில் நீரைத் தேக்கிவைத்து வழங்கும் முறை முழு அளவில் சீர்குலைந்ததன் விளைவாக நீரின்றித் தவிக்கும் நிலையைச் சமாளிக்க வேண்டிய புதுப் பிரச்சினையும் அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

முதலில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் காரணமாக 100 நகரங்களும் கிராமங்களும் அழிந்தன.

18 மணி நேரத்திற்குப் பிறகு ஏற்பட்ட இரண்டாவது நில நடுக்கம் 2,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்குப் பரவியிருந்தது.

'ககாக்' என்னும் நகரில் ஒரு சுவர்கூட நில நடுக்கத்தின் விளைவிலிருந்து தப்பவில்லை!

இந்நில நடுக்கம் இரவில் ஏற்பட்டிருக்குமானால் உயிரிழப்பு இன்னும் பல மடங்கு இருந்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

இராணுவமும் போலீசும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றன. மன்னரும் அரசியும் நேரடியாகவே இப்பணிகளைக் கவனித்துவருகின்றனர்.

இதற்குமுன் இதே மாதத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் காரணமாக மணிலாவிலும் இந்தோனேஷ்யாவிலும் 500 பேருக்கு மேல் உயிரிழந்திருக்கின்றனர்.

# புதிய மாணவர்களைத் துன்புறுத்தும் செயல்

## இவ்வாண்டு எந்தக் கல்லூரியிலும் நடக்கவில்லை

சென்னை, ஆக. 31—

தமிழகக் கல்லூரிகளில் புதிதாகச் சேர்ந்த மாணவர்களைப் பழைய மாணவர்கள் நெடு நகையாடித் துன்புறுத்தும் செயலில் ஈடுபட்டதற்காகச் சென்ற ஆண்டு பல்வேறு கல்லூரிகளிலும் பல மாணவர்கள்மீது நடவடிக்கையெடுக்கப்பட்டு கல்லூரியிலிருந்தே நீக்கப்பட்டனர்; அதன் பிறகு, அரசு எல்லாக் கல்லூரி முதல்வர்கட்கும் அனுப்பிய சுற்றறிக்கையில், இப்படிப்பட்ட சம்பவம் நடக்காதிருக்கும்படி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தியிருந்தது; இவ்வாண்டும் முன்னெச்சரிக்கையாக ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது; அதன் விளைவாக இவ்வாண்டு எந்த ஒரு கல்லூரியிலும் அப்படிப்பட்ட சம்பவம் நடந்ததாகப் புகார் எதுவும் வரவில்லை"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

# மணவழகர் மன்றச் சிறப்புக் கூட்டம்

சென்னை மணவழகர் மன்றச் சார்பில் 4—9—68 மாலை 5 மணிக்கு அரண்மனைக்காரத் தெரு கோகலே மண்டபத்தில் சிறப்புக் கூட்டம்; தலைவர்: கே. ஏ. கிருட்டினசாமி; வரவேற்பு: பு ரா. கோகுலகிருட்டினன்; சிறப்புரை: புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., கி. மனோகரன் எம்.பி, சி. பி. சிற்றரசு எம் எல்.சி., ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ, கோவை செழியன் பி.ஏ.

நன்கொடை: ரூ. 5; 3; 2; 1; பெண்களுக்கு 50-காசு.

திராவிட முன்னேற்ற க் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-13) [illegible]

# அரிசன வாலிபன் தீயிலிடப்பட்ட சம்பவம்

## முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசவில்லை

சென்னை, ஆக. 31—

"ஆந்திரத்தில் அரிசன வாலிபனை அடித்துத் தீயிட்டுக் கொளுத்திச் சாகடித்த சம்பவம் பற்றிப் பேச முதலமைச்சர் மாநாடு கூடவுமில்லை; வேறு காரணங்களுக்காகக் கூடிய முதலமைச்சர் மாநாட்டில் அந்தச் சம்பவம் பற்றிப் பேசவுமில்லை"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

# 18,000 டாங்கிகள் --- 1,000 விமானங்கள் பயன்படுத்தப்படுவதா?

## 6 இலட்சம் படை வீரர்களை சிறிய நாட்டின்மீது ஏவுவதா?

புதுடில்லி, ஆக. 30—

தங்கள் நாட்டின் அரசியல் வாழ்க்கையில் சனநாயகச் சீர்திருத்தங்களைச் செய்வதற்காக செக்கோஸ்லோவேகியா மக்கள் தீவிரமாக மேற்கொண்டுள்ள இயக்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் தனி நபர் தீர்மானமொன்று மக்களவையில், பெரும் எண்ணிக்கை பலத்தில் நிறைவேறியது.

தீர்மானத்துக்கு ஆதரவாக 112 வாக்குகளும், எதிராக 9 வாக்குகளும் கிடைத்தன; ஓர் உறுப்பினர் நடுநிலைமை வகித்தார்.

"ஒரு சின்னஞ்சிறிய --- ஆனால் தீரமான நாட்டின்மீது வார்சா ஒப்பந்த நாடுகள் 18,000 டாங்கிகளையும், 1,000 விமானங்களையும், 8 இலட்சம் படை வீரர்களையும் பயன்படுத்தியுள்ளனர்"

என்று முன்னாள் அமைச்சர் அசோக் மேத்தா சொன்னபோது, உறுப்பினர்கள், 'வெட்கம், வெட்கம்' என்று குரலெழுப்பினர்.

# குழுக் கூட்டம்

"சென்னை 9-வது வட்ட தி.மு.க. தோழர்கள்—சார்புமன்ற நிர்வாகிகள் ஆகியோரடங்கிய கூட்டம், 3—9—68 மாலை 7 மணிக்கு பழைய ஆட்டுத்தொட்டி குடிசை வாழ்வோர் சங்கத்தில் நடைபெறும்" என்று, துணைச் செயலாளர் அறிவிக்கிறார்.

# பரிசோதனையல்ல--- பதவி வெறியின் விளைவு!

## சனநாயகம் உயிர் வாழ என்ன செய்தீர்கள்?

### மக்கள் நம்பிக்கையை இழந்தோர் 'பொம்மை அமைச்சரவை'களை அமைப்பதா? --- காங்கிரசுக் கட்சிக்கு செ. கந்தப்பன் இடித்துரை

புதுடில்லி, ஆக. 31—

"இந்த நாட்டில் சனநாயகம் உயிர் வாழ்வது பற்றிக் கவலைப்படாததற்காக, மத்திய அரசாங்கத்தைப் பகிரங்கமாகக் கண்டிக்கிறேன்.

"கொஞ்ச காலத்திற்கு ஒரு மாநிலத்தை எந்தக் கட்சி ஆள்கிறது என்பது பற்றிக் கவலை இல்லை. நமது முயற்சிகளால் இந்த நாட்டில் சனநாயகம் உயிர் வாழும்படி பார்த்துக்கொள்வதே 1967 தேர்தலுக்குப் பின் நமக்கு உள்ள கவலையாகும்!

"உதாரணத்திற்கு எனது மாநில விவகாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள் -- உதாரணத்திற்காகத்தான் நான் இதைச் சொல்லுகிறேன் -- காங்கிரசு அங்கே 1967-ல் படுதோல்வியைச் சந்தித்தது; சில மாத காலம் மிக அமைதியாக இருந்தது; அதிர்ச்சியிலிருந்து அவர்களால் மீள முடியவில்லை; ஆனால் திடீரென ஆகஸ்டு முதல் நாளன்று ஊர்வலம் நடத்துவதென்று இளைஞர் காங்கிரசு தீர்மானித்தது.

"அந்த ஊர்வலத்தின் நோக்கம் என்ன?—'ஆகஸ்டுத் திங்கள் இறுதிக்குள் தி. மு. க. அரசாங்கத்தை வெளியேற்றுவதுதான் நோக்கமாகும்-

"அது எதற்காக -- அதை எவருமறியார்! அவர்களே கூட அறியமாட்டார்கள்! அவர்களது ஏமாற்றமும்பதவி வெறியுமே இந்த எரிச்சல் மூட்டலுக்குக் காரணம் -- அதற்காகவே ஊர்வலம் நடத்தினார்கள்! துரதிருஷ்டவசமாகத் தடியடிப் பிரயோகமும், சில பல நிகழ்ச்சிகளும் நடந்துவிட்டன!

"பின்னர், மூன்று நாட்கள் கழித்து அவர்கள் ஒரு சவ ஊர்வலத்தை -- மௌன ஊர்வலத்தை நடத்தினார்கள்; இது வேடிக்கையானதுதான். சனநாயகத்தின் வரலாற்றில் உலகில் எங்கேனும் இப்படி நடந்ததாக நான் கேள்விப்பட்டதில்லை.........

அவைத் தலைவர்:—"பஞ்சாபைப் பற்றிப் பேசுங்கள்; தமிழகம் பற்றிப் பேசவேண்டாம்."

செ. கந்தப்பன்:—"பஞ்சாப் என்ன -- சனநாயகத்தின் தலைவிதி எங்கேயும் ஒன்றுதான்"

"இது, அவர்களது பதவி வெறியையே காட்டுகிறது என்பதற்கு நான் உருப்படியான உதாரணம் ஒன்றைத் தருகிறேன்; அரசாங்கத்திடம் அதை மறுக்கும் வாதம் ஏதேனுமிருக்குமானால், அவர்கள் வாதிக்கட்டும்!

"1965-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது ஏராளமான பேர் இறந்தனர்; நாங்கள் அதற்கு மௌன ஊர்வலம் நடத்தவில்லை!

"ஆனால் இந்த விவகாரத்தில்—அதிருஷ்டவசமாக யாரும் சாகவில்லை—யாரும் சாகாமலே அவர்கள் மௌன ஊர்வலம் நடத்தினார்கள்; இந்த மௌன ஊர்வலம் தாமதமான ஒன்று"

இவ்வாறு மக்களவையில், கழக உறுப்பினர் செ. கந்தப்பன் அவர்கள், ஆக. 29-ம் நாளன்று பஞ்சாப் விவகாரம் பற்றி நடைபெற்ற விவாதத்தின்மீது பேசுகையில் தெள்ளத் தெளிவுற எடுத்துரைத்தார். அவர் ஆற்றிய உரை வருமாறு:—

"சிறிது நேரத்திற்குமுன் பேசிய காங்கிரசு உறுப்பினர் ஒருவர், 'பஞ்சாபில் கில் அமைச்சரவையை ஆதரித்ததன் மூலம் நாங்கள் ஒரு பரிசோதனை செய்தோம்' எனக் கூறினார்.

நாடெங்கிலும் காங்கிரசுக் கட்சி மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டது என்பது, 1967-க்குப் பின் அனைவருக்கும் தெள்ளத் தெளிவாகிவிட்டது; பின்னும் அவர்கள் செய்த அந்தப் பரிசோதனை என்ன என்று கேட்க விரும்புகிறேன்.

அது காங்கிரசின் மனத்தில் 'சரி' என்றும் படலாம் -- 'தவறு' என்றும் படலாம்; ஆனால், பிரச்சினையின் மையம், காங்கிரசு, மக்களிடம் தனக்குள்ள ஆதரவை இழந்துவிட்டது என்பதே!

நாடெங்கிலும் கிளைகளைப் பெற்றிருக்கின்ற -- நாட்டில் சனநாயகத்தைத் தூக்கிப்பிடிக்க வேண்டிய பொறுப்பைப் பெற்றிருக்கின்ற ஒரு கட்சியின் கடமை என்ன? இடையில் கொஞ்ச காலம் கேரளத்திலும், ஒரிசாவிலும் ஏற்பட்ட நிலைமைகள் போக நீண்ட இருபதாண்டுக் காலம் எதிர்ப்பின்றி ஆண்ட கட்சியின் நிலை என்ன?

'மக்கள் நம்பிக்கையை முற்றிலும் நாம் இழந்துவிட்டோம்' என்பதை அவர்கள் முற்றிலும் உணர்ந்துள்ளனர்.

அடுத்த பொதுத் தேர்தலுக்கு ஓர் ஐந்தாண்டுக்காலம் இருக்கிறது!

எதிர்க் கட்சியில் இருப்பது காங்கிரசாருக்குச் சரியானதில்லையா? தமது நடவடிக்கைகளால் -- செயல்களால் -- மற்றும் -- உருப்படியான எதிர்ப்பால் தாம் (பிற) எதிர்க் கட்சிகளைவிட நன்கு நடத்தப்படுவதற்கு உரியோர் என மக்களிடம் மெய்ப்பித்துக் காட்டுவது காங்கிரசாருக்குச் சரியானதாகாதா? அவர்கள் அதைச் செய்கிறார்களா? ஏன் அவர்கள் அதைச் செய்யவில்லை?

'பொம்மை அமைச்சரவை'களை-பொம்மை ஆட்சிகளை -- பஞ்சாபில் மட்டுமின்றி பீகாரிலும் அமைத்ததன்மூலம் வெளிப்பட்டது, பதவி வெறிதானே?

கூட்டணி அரசாங்கங்களை நகைத்துப் பேசுவதற்கோ, குறைத்துக் காட்டுவதற்கோ, ஏமாற்றுவதற்கோ, காங்கிரசு ஒருபோதும் சளைத்ததில்லை! இது பற்றி நிறையச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், கட்சிகள் ஒன்றுபட்டு ஓர் அரசை அமைப்பது பாவமா என்ன?

சரியாகச் சொன்னால், நான், கூட்டணி ஆட்சிக்கு அதிக மரியாதை தருவேன் -- உதாரணமாகக் கேரள அரசுக்கு!

பத்திரிகைகளில் மிகப் பல தோன்றியபோதிலும் -- மிகப் பல செய்யப்பட்டபோதிலும் -- கடந்த இரண்டாண்டுகளாக அவர்கள் நிர்வாகத்தை நடத்தி வருவதைப் பார்க்கிறோம்; இது, கூட்டணி ஆட்சிகளுக்கு ஒரு மதிப்பாகும்.

ஆமாம்; எதிர்க் கட்சிகள் ஒன்றுபட்டன -- வென்று தீர்ந்தன -- கேரளத்தில் அவர்கள் வெற்றிகரமாகச் செயல்படுகிறார்கள்!

வங்கம், உத்தரப் பிரதேசம், பஞ்சாப் மற்றுமுள்ள இடங்களில் நீங்கள் அவர்களை அனுமதிக்கவில்லை! உங்களது கவிழ்ப்பு வேலைகள் அங்கே வென்றுவிட்டன! உங்களது முயற்சிகள் அங்கே வென்றுவிட்டன!

கூட்டணி ஆட்சியைவிடத் தமது பொம்மை ஆட்சிகளே சிறந்தன என்கின்றனர் காங்கிரசார்! இதுதான், உண்மையிலேயே சனநாயகத்திலே நாட்டமுள்ள காங்கிரசாரின் வாதமா? யாரேனும் அப்படிக் கற்பனை பண்ணிப் பார்க்கமுடியுமா? பொம்மை ஆட்சிகளில் அணுவளவேனும் சனநாயகம் இருக்கிறதா?

எந்தவிதமான கொள்கையுமில்லாத -- எங்கோ இருந்து ஓடி வந்த சிறு கும்பலை நீங்கள் பதவியில் அமர்த்துகிறீர்களே -- அதை எப்படி உங்களால் ஒத்துக்கொள்ள முடிகிறது?

அதை, 'ஒரு பரிசோதனை' என்கிறீர்கள் -- என்னவிதமான பரிசோதனை அது? சனநாயகத்தில் இது ஒரு பரிசோதனைதானா -- நிச்சயமாக இல்லை!

திட்டவட்டமாக, இது மாநிலங்களில் -- காங்கிரசுக்காரர்களின் மனதிலுள்ள பதவி வெறியின் உருவமேயாகும்! இது, மிகவும் துரதிருஷ்டமானதாகும்!"

# திருமண அழைப்பு

பேரன்புடையீர்!

பணிவுள்ள வணக்கம். 4–9–68 புதன்கிழமை காலை 10 மணியளவில், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் எனக்கும் – தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி திரு. பி. கே. நரசிம்மன் அவர்களின் மகள் செல்வி: கலைராணிக்கும் பாப்பாரப்பட்டி மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண விழாவிற்குத் தாங்கள் வருகை தந்து சிறப்பித்தருள வேண்டுகிறேன்.

அன்புள்ள

**நா. கிருட்டினன்,**

சட்டமன்ற உறுப்பினர்,

காஞ்சிபுரம்.